# PONDICHERRY POLICE (AMENDMENT) ACT 1965

Section 1 of the Police Act, 1861 shall be renumbered as sub-section (i) thereof and after that the following sub-section (2) shall be added, namely:

"(2) Unless the context otherwise requires,-

(a) 'public place' means a road, street or way, whether a thoroughfare or not, and landing place to which the public are granted access or have a right to resort, or over which they have a right to pass;

(b) 'State Government' means the Central Government and includes the Administrator of the Union territory of Pondicherry appointed by the President under Article 239 of the Constitution."

(Vide Pondicherry Act VI of 1966, Sec 2 (18-2-1966)

After secion 8, Sections 8-A and 8-B shall be inserted, namely:-

"8-A. Unlawful assumptionof Police function, personation, etc:- Any person who-

(a) unlawfully assumes any function assigned to, or power conferred on, a police officer, or

(b) has in his possession, without any lawful excuse, any distinctive article or any dress required to be worn exclusively by a police officer, or

(c) puts on any drese with the intention of being taken as a police officer, or

(d) personates a police officer,

shall, in addition to any other punishment to which he may be liable for any offence committed by him under such assumed character, be punishable with imprisonment for a term which may extend to six months or with fine or with both.

8-B. Penalty for offences against police Officers:- If any person maliciously or without reasonable and probable cause prefers any false or frivolours charge against any police officer in any Court of law, he shall be punishable with imprisonment for a term which may extend to three months or with fine or with both".

(Vide Pondicherry Act VI of 1966, Section 3 (10-3-1966)

"29-A. Prohibition of smoking in places of entertainment:-

(1) If any entertainment (including cinematograph exhibition, dance or drama) to which members of the public are admitted, whether on payment or not, is held in a closed place or building, then no person shall during the prohibited period, as defined in sub-section (2), smoke either-

(a) on the stage except in so far as smoking may be any part of entertainment, or

(b) in the auditorium, that is to say, in that position of the enclosed place or building in which the accommodation is provided for members of the public:

Provided that the State Government may, by notification in the Gazette, exempt any class of entertainments from the provisions of this sub-section.

(2) For the purpose of sub-section (1), prohibited period means so much of the period commencing thirty minutes before the beginning of the entertainment and ending with the termination thereof, as may fall within the hours which the State Government may, by notification in the official Gazette, specify in this behalf for entertainments generally or any class of entertainments.

(3) Any person who contravenes the provisions of this section shall be liable to be ejected summarily from the enclosed place or building by any police-officer and shall also be punishable with fine which may extend to fifty rupees.

(4) A person ejected under sub-section (3) shall not be entitled to the refund of any payment made by him for admission to the entertainment or to any othercompensation.

29-B. Powers of police on occurrence of a fire:- (1) on the occurrence of a fire, any police officer above the rank of a constable, or any member of the Fire Services above the rank of a fireman, may-

(a) remove or order the removal of any persons who by their presence interfere with or impede the operations for extinguishing the fire for for saving life or property;

(b) close any street or passage in or near which the fire is burning

(c) by himself or those acting under his orders, break into or through, or pull down, or use for the passage of hoses, or other appliances, any premises for the purpose of extinguishing the fire, doing as little as damage as possible;

(d) cause the mains and pipes in any area to be shut off as to give greater pressure of water in the place where the fire has occurred;

(e) call on the persons in charge of any fire engined to render such assistance as may be possible; and

(f) generally, take such measures as may appear necessary for preservation of life and property.

(2) Any damage done on the occurrence of fires by members of Fire Services or any fire-brigade or by police officers or their assistants in the due execution of their duties shall be deemed to be damage by fire within the meaning of any policy of insurance against fire.

Explanation:

Nothing in this section shall exempt any police officer or any member of Fire-Service or fire-brigade from liability to damages on account of any acts done by him without reasonable cause.

29-C. Penalty for false alarm of fire:- Whoever gives or causes to be given to any fire brigade or to any member thereof or to any member of the Fire-Services, whether by means of a street fire alarm, statement, message or otherwise, any alarm of fire which he knows to be false, shall be punishable for the first offence with fine which may extend to fifty rupees and for a second or subsequent offence with imprisonment which may extend to six months and with fine."

(Vide Pondicherry Act VI of 1966, Sec.4 (10-3-1966)

After Section 34, the following sections shall be inserted, namely:-

"34-A. Penalty for being found armed between sunset and sunrise intending to commit an offence:- Whoever is found between sunset and sunrise:-

(i) armed with any dangerous instrument with intent to commit an offence, or

(ii) having his face covered or otherwise disguised with intent to commit an offence, or

(iii) lying or loitering or squatting in any bazar, yard or public place and without being able to give a satisfactory account of himself, or

(iv) in any dwelling-house, or other building, or on board any vessel or boat, without being able to account satisfactorily for his presence there, or

(v) having in his possession, without lawful excuse any instrument of house-breaking,

shall be punishable with imprisonment for a term which may extend to three months.

34-B. Penalty for certain offences in public place:

Whoever, in any public place,-

(i) drives, drags or pushes any vehicle at any time between half an hour after sunset and half an hour before sunrise without sufficient light;

(ii) without reasonable cause, drives, drags or pushes any vehicle otherwise than in accordace with the rules of the orad notified from time to time by the State Government, of fails to obey the directions of a police officer for the time being in charge of regulation of traffic;

(iii) leads or rides any animal or drives, drags or pushes any vehicle upon any foot-way, or fastens any animal so that it can stand across or upon any foot-way;

(iv) permits any cattle or vehicle to be under the control of a child under the age of twelve years;

(v) conveys through the streets any article which projects more than five feet in front or behind the vehicle or vehicles on which it is planted;

(vi) beats a drum or tom-tom, or blows a horn or trumpet or beats or sounds any brass or other instrument or utensil or plays any music or uses any sound amplifier except at such time and place and subject to such conditions as may be specified in a licence issued in this behalf by the Inspector-General of Police or by any authority authorised in this behalf by him;

(vii) Without the consent of the owner or occupier, in any manner affixes or causes to be affixed any bill, notice, document, paper or other thing upon any place or any building, monument, statue, effigy, post, wall, fence, tree or other erection therein or in any manner disfigures, writes upon or other wise marks, or causes to be defaced, disfigured, written upon, or otherwise marked any such public place or any such building, monument, statue, effigy, wall, fence, post, tree or erection;

(viii) begs or applies for alms, or exposes or exhibits any sore, wound, bodily ailment or deformity with the object of exciting charity or extorting alms; using indecent or threatening languages;

(ix) uses any indecent, threatening, abusive or insulting words or behaves in a threatening or insulting manner or posts up or affixes or exhibits any indecent, threatening, abusive or insulting paper or drawing with intent to provoke a breach of peace or whereby a breach of peace may be occasioned;

shall be punishable with fine which may extend to fifty rupees or with imprisonment for a term which may extend to one month.

34-BB:- Penalty for annoying females in public place or office:-

Whoever with a view to annoying any female, wilfully and indecently exposes his person or any porttion thereof, makes any gesture, utters any word, or makes any sound, intending that such person or portion thereof or gesture shall be seen or that such word or sound shall be heard by such female in any public place or office, whether such exposure, gesture, word or sound is made or uttered from within any house or building or not, shall be punishable with imprisonment for a term which may extend to one month, or with fine which may extend to fity rupees, or with both."

(Vide Pondicherry Act VII of 1968, Sec.2
(11-5-1968)

34-C:- Penalty for committing nuisance in public place:

Whoever in or by the side of or near to any public place commits a nuisance by easing himself or passing urine, or whoever having the care or custody of any child under seven years of age omits to prevent such child committing a nuisance by easing himself or passing urine, shall be punisable withi fine may extend to fifty rupees.

34-D:- Penalty for lighting bonfire, burning straw, discharging fire-arm etc, in or near any public place:

(1) Whoever, except at such times and places as the Inspector-General of Police or any person authorises in this behalf by him may allow, in or near any public place lights any bonfire, sets fire to or burns any straw or other matter discharges any fire-arm or air-gun, lets off or discharges any fire-work, or sends up any fire-baloon or permits such act to be done in premises over which he had control, shall be punishable with fine which may extend to fifty rupees.

(2) In the event of any such act as is referred to in sub-section (1), being done within any private premises, the person having the immediate control of such premises shall be deemed to have permitted the act, unless he can prove that the act was committed without his knowledge.

34-E:- Penalty for drunkenness or riotous ~~or indecent~~ indecent behaviour in public place:-

(1) Whoever is found drunk and incapable of taking care of himself or is guilty of any riotous, disorderly or indecent behaviour in any public place, in any place of publice amusement, or on board any passenger, boat or vessel shall be punishable with imprisonment for a term which may extend to one month or with fine which may extend to fifty rupees or with both.

(2) Whoever is guilty of any violent disorderly or indecent behaviour in any police office or station shall be punishable with imprisonment for any term which may extend to one month or with fine which may extend to fifty rupees or with both.

34.F : Pawn-brokers, etc. to report stolen property if tendered for pawn or sale:-

(1) Any officer of police may deliverto any pawn-broker, dealer in second hand property or worker in metals, a list of any property believed to have been stolen and thereupon it shall be the duty or such pawn-broker dealer or worker as aforesaid, upon any article answering the description of any of the property set forth in any such list, being offered him in pawn, for sale or otherwise, to enquire the name and address of the party offering such article, to seize and detain the article and forthwith to communicate to the nearest police station, the fact of such article having been offered and such name and address as may be given by the party offering.

(2) Any pawn-broker, dealer or worker who fails, without any reasonable excuse, to comply with the requirement of sub-section (1) shall be punishable with fine which may extend to fifty rupees for every such offence.

(3) A pwn-broker, dealer or worker to whom any article as is referred to in sub-section (1) is offered may detain the person offering such article, pending the arrival of the police."

(Vide Pondicherry Act VI of 1966, Sec.5 (1●-3-1966)

34-G:- (1) Prohibition of sale of tickets for admission to an entertainment except under the order of, and at the place provided and price fixed by, the proprietor of the entertainment:-

Whoever sells or attempts to sell tickets for admission to a place of entertainment, except under the orders of, and the place provided and price fixed in this behalf by, the proprietor of the entertainment, shall be punishable with imprisonment for a term which may extend to three months or with fine which may extend to one hundred rupees or both.

(2) Any police officer who takes cognizance of any offence under sub-section (1) may seize any ticket in respect of which he is satisfied that any such offence has been committed.

(3) A court trying any offence punishable under sub-section (1) may, without prejudice to any other or further order or orders that may, in its opinion, be passed in this case, direct the forfeiture of any tickets which have been seized under sub-section (2).

Explanation:- In this section-

(a) 'entertainment' means any exhibition, performance, amusement, game or sport to which persons are admitted on production of tickets; and

(b) 'proprietor', in relation to any entertainment, includes any person responsible for the management of such entertainment."

In the principal Act, in Section 35-B, for the word, figures and letter "or 34-E", the figures, letters and word "34-E or 34-G" shall be substituted.

(Vide Regulation 2 of 1979, Sec.2 (9-4-1979.)

After section 35, the following sections shall be inserted namely:-

"35-A. Fee for licence:- For every licence or permission granted under this act, the Inspector-General of Police may levy such fee not exceeding two rupees as may from time to time, be fixed by the State Government.

35.C:- Penalty for breach of conditions of licences:-

(1) For any breach of the conditions of a licence granted under this Act, the offender shall be liable on conviction to fine, not exceeding one hundred rupees and such fine may be recovered from the person licensed, not withstand that such breach may have been owing to the default or carelessness of his servant or agent in charge of the shop or place.

(2) Any lincence granted to a person who is convicted for any breach of any of the conditions of a licence granted under this Act shall also be liable to be cancelled at the discretion of the Inspector-General of Police".

(Vide Pondicherry Act VI of 1966, Sec. 6 (10-3-1966).

## நோக்கோள்கள், காரணங்கள் ஆகியவற்றின் விளக்கம்

## 1861-வது ஆண்டு போலீஸ் சட்டம்

(1861-வது ஆண்டு மத்திய சட்டம் எண். 5)

*******

இந்த ஆட்சிப்பரப்புக்கு பாண்டிச்சேரி (சட்டங்கள்) ஒழுங்குமுறை விதிகள், 1963-ன் கீழ் 1-10-1963-ல் இருந்து விஸ்தரிக்கப்பட்டுள்ளது. யதார்த்த நடைமுறையில், பிரஸ்தாப சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கடமைகளும் அதிகாரங்களும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நிறுத்துவதற்கும் பொது ஜன உபத்திரவத்தைத் தடுப்பதற்கும் போதுமானவையல்லவென்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப, அண்டை ராஜ்யமாகிய சென்னையிலுள்ள போலீஸ் சட்டங்களில் கண்டுள்ள சில உபயோகமான ஷரத்துக்களைச் சேர்ப்பதன் மூலம் தற்போதைய இந்த மசோதா 1861-வது ஆண்டு போலீஸ் சட்டத்தைத் திருத்தியமைக்க நாடுகிறது.

பாண்டிச்சேரி,
12-7-1965.

வை. வெங்கடசுப்பாரெட்டியார்,
முதலமைச்சர்.

போலீஸ் (பாண்டிச்சேரி திருத்த) மசோதா, 1965.

(மசோதா எண் 19, 1965)

---------

பாண்டிச்சேரி யூனியன் ஆட்சிப்பரப்புக்கு 1861-ம் ஆண்டு போலீஸ் சட்டத்தை உபயோகிக்க வழிவகை செய்யும்படி மேலும் திருத்தம் செய்கிற ஒரு மசோதா.

-----

இந்தியக் குடியரசின் பதினாறாவது ஆண்டில் பாண்டிச்சேரி சட்டசபையினால் பின்வருமாறு சட்டமாக இயற்றப்படட்டும்:-

பெயர்ச்சுருக்கமும் விரிவும் தொடக்கமும்

1. (1) இந்தச் சட்டமானது "போலீஸ் (பாண்டிச்சேரி திருத்த) சட்டம், 1965" என்று வழங்கப்படலாம்.

(2) அது பாண்டிச்சேரி யூனியன் ஆட்சிப் பரப்பு முழுவதிலும் வியாபிக்கும்.

(3) அது உடனே அமலுக்கு வரும்.

பிரிவு 1-ன் திருத்தம்

2. 1861-வது ஆண்டின் போலீஸ் சட்டத்தின் *(இனிமேல் இது 'அசல் சட்டம்' என்று குறிக்கப்படும்) 1-வது பிரிவானது அதன் உப பிரிவு (1) ஆக மாற்றி அமைக்கப்படுவதுடன் அவ்விதம் மாற்றி அமைக்கப்பட்ட உப பிரிவு (1)-க்கு அப்புறம் பின்வருகிற உப பிரிவு சேர்க்கப்படும்.

*1861-வது ஆண்டின் சட்ட எண் 5

அதாவது:-

"(2) சந்தர்ப்பம் வேறு விதமாக வேண்டாத வரையிலும்.

(அ) "பொதுவிடம்" என்பது பொது ஜனங்கள் வரக்கூடிய அல்லது ஓய்வு பெற உரிமையுள்ள அல்லது கடந்து செல்ல உரிமையுள்ள (சாலை, தெரு, சந்தியாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் பாதை, இறங்குமிடம் உட்பட) இடம் என்று பொருள்படும்.

...2/-

(பி) 'ராஜ்ய அரசாங்கம்' என்பது மத்திய அரசாங்கம் என்று பொருள்படுவதோடு அரசியலமைப்பில் 239-வது விதியின் கீழ் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பாண்டிச்சேரி யூனியன் ஆட்சிப்பரப்பின் ஆட்சியாளரையும் உட்படுத்தும்.

8-ஏ, 8-பி ஆகிய புதிய பிரிவுகளின் சேர்ப்பு

3. அசல் சட்டத்தின் 8-வது பிரிவுக்கு அப்புறம் பின் வருகிற பிரிவுகள் சேர்க்கப்படும். அவையாவன,

போலீஸின் காரியங்களை சட்டப்படியல்லாமல் மேற்கொள்ளுதல் போலீஸ் போல நடித்தல் முதலியன.

8-ஏ. யாதொருவராகிலும்

(ஏ) போலீஸ் அதிகாரி ஒருவருக்கு அளிக்கப்பட்டுள்ள யாதொரு காரியத்தை அல்லது அவருக்கு உரிய அதிகாரத்தை சட்டப்படியல்லாமல் மேற்கொண்டால், அல்லது

(பி) சட்டப்படி மன்னிக்கப்பட கூடிய முறையில் அன்றித் தம்மிடம் போலீஸ் அதிகாரி ஒருவரால் அணியப்படும் உடுப்பின் தெளிவான யாதொரு பொருளை வைத்திருந்தால், அல்லது

(சி) தான் போலீஸ் அதிகாரி என்று கொள்ளப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு யாதொரு உடுப்பை அணிந்தால், அல்லது

(டி) யாதொரு போலீஸ் அதிகாரி போல நடித்தால் அவ்விதம் மேற்கொள்ளப்பட்ட நடத்தையின் கீழ் இழைக்கப்பட்ட யாதொரு குற்றத்திற்காகவும் அவருக்கு அளிக்கப்படக்கூடிய மற்றைய யாதொரு தண்டனையோடு கூட ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய கால அளவு சிறை தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

போலீஸ் அதிகாரிக்கு விரோதமான [illegible]களுக்கு தண்டனை

8-பி யாதொருவராகிலும் பகை எண்ணத்தோடு அல்லது பொருத்தமும் உறுதியும் உள்ள காரணமில்லாமல் யாதொரு போலீஸ் அதிகாரிக்கு விரோதமாக யாதொரு நீதி மன்றத்தில் யாதொரு தவறான அல்லது ஈனமான குற்றச்சாட்டை எடுத்துச்சென்றால் அவருக்கு மூன்று மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய சிறை தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் நீடிக்கப்படும்.

29-ஏ முதல் 29-சி வரை புதிய பிரிவுகளின் சேர்ப்பு

4. அசல் சட்டத்தின் 29-வது பிரிவுக்கு அப்புறம் பின்வருகிற பிரிவுகள் சேர்க்கப்படும். அவையாவன,

"29-ஏ(1) மூடிய ஒரு இடத்தில் அல்லது கட்டிடத்தில் காசு கொடுத்தோ இல்லாமலோ பொது ஜனங்கள் அனுமதிக்கப்படுகிற ஏதாவதொரு களியாட்டம் (சினிமாக்காட்சி, நடனம், நாடகம் உள்பட) நடத்தப்பட்டால், அப்போது, உபபிரிவு (2)-ல் கூறியுள்ளபடி தடை செய்யப்படும் கால அளவுக்கிடையில் யாரொருவராகிலும்:-

(ஏ) புகை பிடிப்பதானது களியாட்டத்தின் ஏதாவதொரு பகுதியாக இருந்தாலொழிய மற்றபடி நாடக மேடையிலாகிலும் அல்லது

(பி) கொட்டகையிலாகிலும், அதாவது பொதுஜன இட வசதி செய்யப்பட்டுள்ள மூடிய இடத்திலாகிலும் கட்டிடத்திலாகிலும் புகை பிடிக்கக் கூடாது.

எனினும் ராஜ்ய அரசாங்கமானது அரசிதழில் ஒரு அறிக்கை வெளியிடுவதின் மூலம் எவ்வித வகுப்புக்குரிய களியாட்டங்களையாகிலும் இந்த உபபிரிவின் உத்தரவுகளில் இருந்து விதி விலக்குச் செய்யலாம்.

(2) உபபிரிவு (1)-ன் நோக்கங்களுக்காக, தடை செய்யப்படும் கால அளவு என்பது களியாட்டம் ஆரம்பிக்கும் முன்னர் முப்பது நிமிடங்களில் இருந்து துவங்கி அது முடியும் வரையிலும் ராஜ்ய அரசாங்கம் அரசிதழில் அறிக்கை வெளியிடுவதின் மூலம் பொதுவாக களியாட்டங்களுக்கென்று அல்லது யாதாகிலும் வகுப்புக்கு உரிய களியாட்டங்களுக்கு என்று அது சம்பந்தமாக குறிப்பிடும் காலத்துக்குள் அமையும் அவ்வளவு கால அளவு என்று பொருள்படும்.

(3) இப்பிரிவின் உத்தரவுகளை மீறுகிற யாரொருவராயினும் யாதொரு போலீஸ் அதிகாரியால் அம் மூடிய இடத்திலிருந்து அல்லது கட்டிடத்திலிருந்து நிச்சயமாக வெளியேற்றப்படுவதுடன் ஐம்பது ரூபாய்கள் வரை நீடிக்கக்கூடிய அபராதமும் விதிக்கப்படுவார்.

(4) உபபிரிவு (3)-ன் கீழ் வெளியேற்றப்பட்ட யாதொருவராயினும் தாம் களியாட்டத்திற்கு அனுமதிக்கப்படுவதற்காக செலுத்திய யாதொரு கட்டணத்தைத் திரும்பப் பெறுவதற்கு அல்லது வேறு எதாயினும் நஷ்ட ஈட்டுக்கு உரிமையுடையவராக மாட்டார்.

தீ ஏற்படும் போது போலீஸாரின் அதிகாரங்கள்

29-பி. தீ ஏற்படும்போது கான்ஸ்டபிள் பதவிக்கு மேற்பட்ட யாதொரு போலீஸ் அதிகாரியாயினும் அல்லது உயர்மேல் பதவிக்கு மேற்பட்ட யாதொரு தீ அணைப்பு படை உறுப்பினராயினும்,

(ஏ) தீயணைக்கும் செயலுக்கு அல்லது உயிரையாயினும் பொருளையாயினும் காப்பாற்றுவதற்கு தாம் அங்கு இருப்பதால் இடைஞ்சலாகிற யாதொருவரையேனும் அகற்றிவிடலாம் அல்லது அகற்றும்படி உத்தரவிடலாம்,

(பி) தீ எரிந்துகொண்டிருக்கும் இடத்தில் அல்லது அதற்கு அருகில் யாதொரு தெருவையாயினும் பாதையையாயினும் மூடி விடலாம்,

(சி) தாமாக அல்லது தமக்காக தமது கட்டளையின் கீழ் வினையாற்றுகிற மற்றவர்களைக்கொண்டு, கூடிய அளவு மிகக் குறைந்த சேதத்துடன் நெருப்பை அவிக்கும் நோக்கத்திற்காக யாதொரு இடத்திலாயினும் நுழையவோ அல்லது உடைத்து செல்லவோ அல்லது தகர்த்தெறியவோ அல்லது நீர்க்குழாய்களை உபயோகிக்கவோ செய்யலாம்.

(டி) தீ ஏற்பட்ட இடத்தில் யாதொரு பகுதியாயினும் நீருக்கு அதிக அழுத்தம் ஏற்படும்படிப் பெரிதாயினும் சிறிதாயினும் நீர் குழாய்களை அமைப்பதற்கான அடைப்பினை செய்யலாம்;

(ஈ) கூடிய அளவு உதவியைப் பெறுவதற்காகத் தீயணைக்கும் யந்திரத்துக்குப் பொறுப்பானவர்களை அழைத்துக் கொள்ளலாம்,

(எப்) பொதுவாக, உயிராகிலும் பொருளாகிலும் காப்பாற்றப் படுவதற்குத் தேவையெனத் தோன்றுகிற அளவு காரியங்களை மேற்கொள்ளலாம்,

(2) தீ ஏற்பட்டபோது தீயணைப்புப்படை உறுப்பினர்களால் அல்லது தீயணைக்கும்படை யாதொன்றினால் அல்லது போலீஸ் அதிகாரிகளால் அல்லது அவர்களுக்கு உதவியவர்களால் தமது கடமைகளை நிறைவேற்றும் காலத்தில் ஏற்பட்ட யாதொரு அழிவாகிலும், நெருப்புக்குப் பாதுகாப்பாகச் செய்யப்படும் யாதொரு இன்ஸ்யூரன்ஸ் கொள்கையின் பொருளுக்கு உட்பட்டு, நெருப்பினால் ஏற்பட்ட அழிவாகவே கருதப்படும்.

<u>விளக்கம்</u>:- இப்பிரிவில் கண்டுள்ள யாதொன்றும் யாதொரு போலீஸ் அதிகாரி அல்லது தீயணைப்புப் படையுறுப்பினர் அல்லது தீயணைப்புப்படை தகுந்த காரணமில்லாமல் செய்கிற செயல்களுக்குத் தாமே பொறுப்பாவதிலிருந்து விதி விலக்கு அளிக்காது.

தவறுதலாகத் தீயென்று [illegible]ய்யமிடுவதற்குத் தண்டனை

29சி. தாம் தவறென்று அறிந்திருந்தும் தீயென்று ஒரு அபாயத்தைத் தெரிவிக்கிற தீய பயக் குறிப்பினால் அல்லது விரைக் குறிப்பினால் அல்லது செய்தியால் அல்லது வேறு யாதாகிலுமொரு விதத்தால் யாதொரு தீயணைக்கும் படைக்கோ அல்லது அதன் யாதொரு உறுப்பினருக்கோ அல்லது தீயணைக்கும் படை ஸ்தாபனங்களின் யாதொரு உறுப்பினருக்கோ அறிவிக்கிற யாதொருவராகிலும் முதல் குற்றத்துக்காக ஐம்பது ரூபாய்கள் வரை நீடிக்கக்கூடிய அபராதமும் இரண்டாவது அல்லது அதற்குப் பின்னுள்ள குற்றத்துக்காக ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய சிறை தண்டனையும் அபராதமும் விதிக்கப்படுவார்."

...6/-

5. அசல் சட்டத்தின் 34-வது பிரிவுக்கு அப்புறம் பின்வரும் பிரிவுகள் சேர்க்கப்படும்.

அவையாவன:-

"34-ஏ. சூரிய அஸ்தமனத்துக்கும் சூரிய உதயத்துக்கும் இடையில்

1. குற்றம் யாதாகிலும் புரியும் எண்ணத்துடன் அபத்தான யாதொரு கருவியை வைத்திருந்தோ அல்லது

2. குற்றம் யாதாகிலும் புரியும் எண்ணத்துடன் தமது முகத்தை மூடியிருந்தோ அல்லது வேறு விதமாக மாற்றம் செய்திருந்தோ, அல்லது

3. தமது செயலுக்குத் திருப்தியான பதிலளிக்க முடியாத நிலையில் கடைவீதியிலே படுத்திருந்தோ சுற்றிக்கொண்டிருந்தோ, அல்லது ஒளிந்திருந்தோ, அல்லது

4. தாம் அங்கு இருப்பதற்குத் திருப்தியான பதிலளிக்க முடியாத நிலையில் யாதொரு குடியிருக்கும் வீட்டிலோ அல்லது வேறு கட்டடத்திலோ அல்லது யாதொரு கப்பல் தளத்திலோ அல்லது படகிலோ, அல்லது

5. சட்டப்படி மன்னிக்கப்படக்கூடிய முறையிலன்றி வீடுடைக்கும் யாதாகிலும் ஆயுதத்தை தம்மிடம் வைத்திருந்தோ

கண்டுபிடிக்கும் யாதொருவராகிலும் மூன்று மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய சிறைத் தண்டனை விதிக்கப்படுவார்.

*பொதுவிடங்களிலே செய்யப்படும் குற்றங்களுக்குத் தண்டனை*

34-பி. யாதொருவராகிலும் ஒரு பொது இடத்தில்

*விளக்கில்லாமல் வாகனம் ஓட்டுதல்*

(1) சூரிய அஸ்தமனத்துக்கு அரை மணி நேரத்துக்கு அப்புறமும் சூரிய உதயத்துக்கு அரை மணி நேரத்துக்கு முந்தியும் உள்ள இடைப்பட்ட நேரத்தில் போதுமான வெளிச்சமில்லாமல் யாதொரு வாகனங்களை ஓட்டினால் அல்லது மூத்தால் அல்லது தள்ளினால்,

*சாலை விதிகளுக்கு முரண்பட்டு வாகனம் ஓட்டுதல் முதலியன.*

(2) வேலைக்கு வேளை அரசிதழில் வெளியாகும் சாலை விதிகளுக்கு முரணான முறையில் யாதொரு வாகனத்தையாகிலும் ஓட்டினால் அல்லது மூத்தால் அல்லது தள்ளினால் அல்லது குறிப்பிட்ட ஒரு கால அளவையில் போக்குவரத்து விதிமுறைக்குப் பொறுப்பான ஒரு போலீஸ் அதிகாரியின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய மறுத்தால்;

*யாதொரு நடைபாதையின் மீதாகிலும் மிருகத்தை அல்லது வாகனத்தை ஓட்டுதல், முதலியன.*

(3) யாதொரு நடைபாதையின் மீதாகிலும் ஒரு மிருகத்தை நடத்தி சென்றால் அல்லது சவாரி செய்தால் அல்லது வாகனத்தை ஓட்டினால் அல்லது மூத்தால் அல்லது தள்ளினால் அல்லது யாதாகிலுமொரு மிருகத்தை ஒரு நடைபாதையின் குறுக்கே அல்லது அதன்மீது நிற்கும்படியான வகையில் கட்டி வைத்திருந்தால்;

*ஆடுமாடுகளை அல்லது வாகனத்தைக் குழந்தையின் பொறுப்பில் விட்டு வைப்பது.*

(4) எவையாகிலும் ஆடுமாடுகளை அல்லது வாகனத்தைப் பன்னிரண்டு ஆண்டுகளுக்குக் குறைந்த வயதுடைய ஒரு குழந்தையின் பொறுப்பிலே விட்டு வைத்திருந்தால்;

*ஐந்து அடிகளுக்கு மேல் நீட்டிக்கொண்டிருக்கும் பொருளை எடுத்துச் செல்லுதல்.*

(5) தான் வைக்கப்பட்டிருக்கும் வாகனத்தின் அல்லது வாகனங்களின் முன்பக்கமோ அல்லது பின் பக்கமோ ஐந்து அடிகளுக்கு மேலாக நீட்டிக் கொண்டிருக்கும் யாதொரு பொருளையாகிலும் தெருக்களின் வழியாக எடுத்துச் சென்றால்;

*சங்கீதம்-இசைத்தல் தம்போரா போடுதல் முதலியன.*

(6) பொலிஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அவர்களால் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட யாதொரு அதிகாரியால் அனுமதிக்கப்படக்கூடிய நேரத்திலும், இடத்திலும், வழங்கப்பட்டுள்ள லைசென்ஸில் குறிப்பிடப்பட்டுள்ள விதமான நிபந்தனைகளுக்கு உட்பட்டும் அன்றி மற்றபடி ஒரு முரசத்தை யாகிலும் அல்லது தம்போராவையாகிலும் அடித்தால் அல்லது ஒரு கொம்பையாகிலும் அல்லது ஊது குழலையாவும், அல்லது கருவியையாகிலும் ஒலித்தால் அல்லது யாராகிலும் சங்கீதத்தை இசைத்தால் அல்லது யாதாகிலும் ஒலிபெருக்கி உபயோகித்தால்;

*சுவரொட்டிகளை ஒட்டுதல் அல்லது சுவர்களை அலங்கோலப் படுத்தல்.*

(7) யாதொரு பொது இடத்திலாகிலும் அல்லது யாதொரு கட்டிடம், நினைவுச் சின்னம் சிலை, பிரதிமை, தடி, சுவர், வேலி, மரம், வேறு நிமிர்ந்து காணப்படும் பொருளமைப்பு ஆகியவற்றின் மீதாகிலும் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பவரின் சம்மதமில்லாமல் எவ்வகையிலாகிலும் யாதொரு சுவரொட்டி, அறிவிப்பு, தஸ்தாவேஜு, காகிதம் அல்லது வேறு பொருளை ஒட்டினால் அல்லது ஒட்டும் படி செய்தால் அல்லது அவ்விதமான யாதொரு பொது விடத்தில் அல்லது யாதொரு கட்டிடம், நினைவுச் சின்னம், சிலை, பிரதிமை, தடி, சுவர், வேலி, மரம் அல்லது நிமிர்ந்து காணப்படும் பொருள் அமைப்பின் மீது வேறு யாதொரு விதமான உருவச் சிதைவை ஏற்படுத்தினால் அல்லது மேற்பகுதியிலே எழுதினால் அல்லது வேறு விதமான குறிகளை ஏற்படுத்தினால் அல்லது அலங்கோலமாகும்படியான முறையில் அல்லது உருவச் சிதைவு ஏற்படும்படியான முறையில் எழுதப்படும்படியாகிலும் அல்லது வேறு விதமாக குறியிடப்படும்படியாகிலும் செய்தால்;

*பிச்சையெடுத்தல்*

(8) பிச்சையெடுத்தால் அல்லது பிச்சை கேட்டு முறையிட்டால் அல்லது யாதாகிலும் புண், காயம், சரீர வாதை, பிச்சை பெறக்கும் நோக்கத்துடன் வெளிக்காட்டினால் அல்லது விளம்பரப்படுத்தினால்;

*பண்பற்ற அல்லது பயமுறுத்தலான சொல்லை உபயோகித்தல்.*

(9) யாதாகிலும் பண்பற்ற, பயமுறுத்துகிற திட்டுகிற அல்லது குத்தலான வார்த்தைகளை உபயோகித்தால் அல்லது பயமுறுத்துகிற முறையில் அல்லது அவமதிக்கிற முறையில் நடந்துகொண்டால் அல்லது அமைதிக்கு பங்கம் விளைவிக்கிற நோக்கத்தோடு அல்லது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கிற முறையில் சந்தர்ப்பத்தை பயன்படுத்தும் நோக்கத்தோடு பண்பற்ற, பயமுறுத்துகிற, திட்டுகிற, அல்லது குத்தலான சொற்களை கொண்ட காகிதத்தையாகிலும் அல்லது சித்திரத்தையாகிலும் உயரமான இடங்களிலே ஒட்டி வைத்தால் அல்லது விளம்பரப்படுத்தி வைத்தால்;

ஐம்பது ரூபாய்கள் வரை நீடிக்கக்கூடிய அபராதம் அல்லது ஒரு மாதம் வரை நீடிக்கக்கூடிய கால அளவு சிறை தண்டனைவிதிக்கப்படுவார்.

...ளிரை பொது இடத்திலோ அல்லது அலுவலகத்திலோ ...டல் செய்வதற்குத் ...டனை.

34-பி.பி. எந்த ஒரு மகளிரையும் வேண்டுமென்றே அசூசை படுத்துவதற்காக யாராவது ஒரு நபர், தன்னுடைய உடலையையோ அல்லது தன் உடல் உறுப்புக்களின் ஒரு பகுதியையோ அநாகரீகமான முறையில் வெளிப்படுத்தினாலோ, ஏதாவது சைகைகள் செய்தாலோ, ஏதாவது வார்த்தைகள் கூறினாலோ அல்லது சப்தம் செய்தாலோ, இவ்வாறு உடலையையோ அல்லது உடல் உறுப்புக்களையோ காண்பித்தல், சப்தம் அல்லது சைகைகள் செய்தல் இவைகளை பொது இடத்தில் அல்லது அலுவலகத்தில் மேற்படி மகளிர் பார்க்க வேண்டும் அல்லது கேட்க வேண்டும் என்ற நோக்கத்தில் செய்தால், மேற்படி உடல் உறுப்புக்களை காட்டுதல், சைகைகள் செய்தல் அல்லது சப்தம் அல்லது ஓசை எழுப்புதல் முதலியவை வீடுகளிலிருந்தோ அல்லது கட்டிடத்திற்குள்ளிருந்தோ செய்தாலும் அல்லது அவைகளுக்கு வெளியிலிருந்து செய்தாலும், அப்படிச் செய்பவர்கள் மீது ஒரு மாதம் வரை நீடிக்கக்கூடிய கால அளவு சிறைத் தண்டனை அல்லது ஐம்பது ரூபாய்கள் வரை நீடிக்கக் கூடிய அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

பொதுவிடத்தில் தொல்லை கொடுப்பதற்கு தண்டனை.

34-சி. யாதொரு பொதுவிடத்திலாகிலும் அல்லது அதன் மருங்கிலாகிலும் அல்லது அதன் அருகிலாகிலும் மலம் அல்லது சிறுநீர் கழிப்பதின் மூலம் தொல்லைகொடுக்கிற யாதொருவரும் அத்துடன் ஏழு ஆண்டுகள் வயதுக்குக் கீழ்ப்பட்ட ஒரு குழந்தையின் பராமரிப்புக்கும் காவலுக்கும் உரியவராக இருந்தும் அதை மலம் அல்லது சிறு நீர் கழிப்பதிலிருந்து அவ்விதம் தடுக்கத் தவறிய யாதொருவரும் ஐம்பது ரூபாய்கள் வரை நீடிக்கக்கூடிய அபராதம் விதிக்கப்படுவார்.

யாதொரு பொது இடத்தில் அல்லது அதன் அருகில் தீ விழா கொண்டாடுதல் வெடிகொளுத்தல், அம்பு எறிதல், சுருகளை [illegible] ஆகியவற்றிற்குத் தண்டனை.

34-டி (1) வேளைக்கு வேளை போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அவர்களால் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட யாதொரு அதிகாரியால் அனுமதிக்கப்படக்கூடிய நேரங்களிலும் இடங்களிலும் அன்றி மற்றப்படி யாதொரு பொதுவிடத்திலோ அல்லது அதன் அருகிலோ, யாதாகிலும் வைக்கோல் அம்புக்கு அல்லது வேறு பொருளுக்குத் தீ வைக்கிற அல்லது எரிக்கிற அல்லது யாதாகிலும் சுருகளை எய்கிற அல்லது விளையாட்டுத் துப்பாக்கி வெடியை வெடிக்கிற அல்லது யாதாகிலும் வெடிபாணத்தை உயரத்தில் ஏற்றுகிற அல்லது அன்னியமான ஒரு செயலைத் தமது கட்டுப்பாட்டிலுள்ள இடங்களில் அனுமதிக்கிற யாதொருவராகிலும் ஐம்பது ரூபாய்கள் வரை நீடிக்கக்கூடிய அபராதம் விதிக்கப்படுவார்.

(2) உபபிரிவு (1)-ல் குறிப்பிட்டுள்ளபடியான யாதொரு செயலாகிலும் யாதொரு தனியார் எல்லையில் ஏற்பட்டால், அவ்வித எல்லையின் உடைமையைக் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள மனிதர், அந்தச் செயலானது தம்முடைய அறிவுக்கு எட்டாமலேயே செய்யப்பட்டது என்று அவர் நிரூபிக்கும் வரை அச்செயலை அனுமதித்தவராகக் கருதப்படுவார்.

பொதுவிடத்திலே குடிபோதை அல்லது காலித்தனமான அல்லது பண்பற்ற நடத்தை ஆகியவற்றிற்குத் தண்டனை

34-(இ) (1) யாதொருவராகிலும் ஒரு பொது இடத்தில் அல்லது பொதுப்போக்கிடத்தில் அல்லது ஒரேற்றம் படகில் அல்லது கப்பல் தளத்தில் குடிபோதையில் தன்னைச் சமாளிக்க முடியாத நிலையில் கண்டு பிடிக்கப்பட்டால் அல்லது காலித்தனமான அல்லது ஒழுங்கில்லாத அல்லது பண்பற்ற நடத்தைக்குப் பொறுப்பாயிருந்தால் ஒரு மாதம் வரை நீடிக்கக்கூடிய கால அளவு சிறைத்தண்டனை அல்லது ஐம்பது ரூபாய்கள் வரை நீடிக்கக்கூடிய அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படுவார்.

(2) யாதொருவராகிலும் ஒரு போலீஸ் ஆபீஸில் அல்லது ஸ்டேஷனில் உக்கிரமான அல்லது ஒழுங்கில்லாத அல்லது பண்பற்ற நடத்தைக்குப் பொறுப்பாயிருந்தால் ஒரு மாதம் வரை நீடிக்கக்கூடிய கால அளவு சிறைத்தண்டனை அல்லது ஐம்பது ரூபாய்கள் வரை நீடிக்கக்கூடிய அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படுவார்.

விற்பனைக்காக அல்லது அடகிலோ திருட்டுப் பொருட்கள் தம்மிடம் வந்தால் அதை அடகுத் தரகர்களும் மற்றவர்களும் அறிவித்தல்.

34-எப் (1) போலீசைச் சேர்ந்த யாரொரு அதிகாரியாகிலும் யாரொரு அடகுத்தரகர், பழம்பொருள் வியாபாரி அல்லது உலோக வேலையாளரிடத்தில் திருட்டுப்போனதாக எனப்படும் உடைமைகளின் விவரப்பட்டியலொன்றைக் கொடுக்கலாம். அவ்விதம் தரப்பட்ட விவரப்பட்டியலில் கண்டுள்ள விவரங்களுக்குப் பதிலளிக்கிற முறையில், தம்மிடம் அடகிலோ விற்பனைக்கோ அல்லது வேறுவிதமாகவோ பொருட்கள் வந்தால் அவ்விதமான பொருளைத் தரத்தயாராயிருக்கிற கட்சியின் பெயரையும் விலாசத்தையும் விசாரிப்பதும், அப்பொருளைப் பறிமுதல் செய்து தம்மிடம் வைத்திருப்பதும், அவ்விதம் பொருளைப் பறிமுதல் செய்து தம்மிடம் வைத்திருப்பதையும் தரத் தயாராயிருக்கும் கட்சியினால் கொடுக்கப்பட்ட பெயரையும் விலாசத்தையும் உடனே அருகிலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்கு அறிவிப்பதும் மேலே சொல்லப்பட்டுள்ளபடியான அடகுத் தரகர், பழம்பொருள் வியாபாரி அல்லது உலோக வேலையாளரின் கடமையாகும்.

(2) மன்னிக்கத் தகுந்த காரணமில்லாமல் உபபிரிவு (1)-ன் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறுகிற யாரொரு அடகுத் தரகர் வியாபாரி அல்லது வேலையாளர் அவ்விதமாக இழைக்கப்படும் ஒவ்வொரு குற்றத்திற்கும் ஐம்பது ரூபாய்கள் வரை நீடிக்கக்கூடிய அபராதம் விதிக்கப்படுவார்.

(3) உபபிரிவு (1)-ல் குறிப்பிடப்பட்டுள்ளபடியான பொருட்களை விலைக்குப் பெறுகிற நிலையிலுள்ள யாரொரு அடகுத் தரகர், வியாபாரி அல்லது வேலையாளர் அப்பொருட்களைத் தரத் தயாராயிருப்பவரை போலீஸார் ஸ்தலத்திற்கு வரும்வரை நிறுத்தி வைக்கலாம்.

களியாட்ட நிகழ்ச்சிகளுக்கு உரிமையாளர் நிர்ணயத்திற்கும் அமைதிக் கட்டணம், விற்கும் இடம் தவிர்த்த வேறு வகையில் டிக்கட்கள் விற்பனையை தடுத்தல்

34-ஜி (1) களியாட்ட நிகழ்ச்சிகளுக்கு அதன் உரிமையாளர் நிர்ணயத்திற்கும் அமைதிக் கட்டணம் டிக்கட் விற்கும் இடம் தவிர்த்த வேறு வகையில் யாரொருவராகிலும் டிக்கட்டுகளை விற்றாலோ அல்லது விற்க முயற்சித்தாலோ மூன்று மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய கால அளவு சிறைத் தண்டனை அல்லது

நூறு ரூபாய்கள் வரை நீடிக்கக்கூடிய அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

(2) உப பிரிவு (1)-ல் கண்டுள்ளபடி நடவடிக்கை எடுக்கும் எந்த ஒரு போலீஸ் அதிகாரியும், மேற் கூறிய படி ஏதாவது குற்றங்கள் நடந்திருக்கின்றன என்று தான் திருப்தியடைந்தால், அந்த டிக்கட்டுகளை கைப்பற்றலாம்.

(3) உபபிரிவு (1)-ல் கண்டுள்ள குற்றத்தை விசாரணை செய்யும் நீதி மன்றமானது, அந்த குற்றத்திற்கான உத்தரவிடும் ஏதொரு தண்டனையையோ அல்லது போட விருக்கும் தண்டனையையோ தவிர்த்து உபபிரிவு (2)-ன்படி கைப்பற்றப்பட்ட டிக்கட்டுகளை பறிமுதல் செய்யும்படி உத்தரவிடலாம்.

விளக்கம்

இந்தப் பிரிவில்

(ஏ) 'களியாட்டம்' என்றால் பொருட்காட்சி, நிகழ்ச்சி, மனக்களிப்பு தரும் நிகழ்ச்சி, விளையாட்டு, விளையாட்டு போட்டிகள் போன்ற நிகழ்ச்சிகள் இவற்றுக்கு அனுமதிச் சீட்டுகளை காண்பித்து உள்ளே நுழைதல்.

(பி) "உரிமையாளர்" என்றால், களியாட்ட நிகழ்ச்சியை பொறுத்தவரை, அத்தகைய களியாட்ட நிகழ்ச்சியை நிர்வகிக்கும் பொறுப்புள்ளவர்.

35-ஏ முதல் 35-சி வரை புதிய பிரிவுகளின் சேர்ப்பு.

6. அசல் சட்டத்தின் 35-வது பிரிவுக்கு அப்புறம் பின் வருகிற பிரிவுகள் சேர்க்கப்படும். அவையாவன:-

35-ஏ. இச்சட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு லைசென்சுக்கும் அல்லது உத்தரவுக்கும் போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அவர்கள், வேளைக்கு வேளை ராஜ்ய அரசாங்கத்தால் ஏற்படுத்தப்படக்கூடியபடி, இருபது ரூபாய்களுக்கு மேற்படாத ஒரு கட்டணத்தை விதிக்கலாம்.

குற்றத்துக்காக வாறண்டு இல்லாமல் போலீஸ் அதிகாரி சிறைபிடித்தல்

35-பி. வாறண்டு இல்லாமல் யாதொரு போலீஸ் அதிகாரியாகிலும் யாதொருவரை அவர் தமது கருத்துப்படி பிரிவுகள் 29-ஏ, 34-ஏ, 34-பி, 34-சி, 34-டி, 34-ஈ, 34-எப் ஆகியவற்றின்கீழ் தண்டனை அளிக்கப்படக் கூடிய குற்றத்தைச் செய்தவராகத் தெரிந்தால் சிறை பிடிக்கலாம்.

லைசென்ஸ் நிபந்தனைகளை மீறுவதற்குத் தண்டனை

35-சி (1) இச்சட்டத்தின் கீழ் வழங்கப்படும் யாதொரு, லைசென்ஸ் நிபந்தனைகளிலொன்றையாகிலும் மீறுகிற யாதொருவர் தண்டனை ஊர்ஜிதமானதன் பேரில் ஆயிரம் ரூபாய்களுக்கு மேற்படாத அபராதம் விதிக்கப்படுவார். மீறுதலானது அவருடைய கடை அல்லது இடத்துக்குப் பொறுப்பாகிய வேலைக்காரர் அல்லது ஏஜெண்டின் கவலையீனம் அல்லது தவற்றினால் ஏற்பட்டிருந்த போதிலுங்கூட அவ்விதமான அபராதம் லைசென்ஸ்தாரரிடமிருந்தே வசூலிக்கப்படும்.

(2) இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒரு லைசென்ஸில் கண்டுள்ள நிபந்தனைகளில் யாதொன்றையாகிலும் மீறிய குற்றம் ஊர்ஜிதமாக்கப்பட்டால் அந்த லைசென்சானது போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அவர்களின் இஷ்டத்துக்கு இணங்க ரத்துச் செய்யப்படும்.